# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி : 10 மலர் : 8 Plant : 10 Flower 8 ஜுன் 2025 June 2025

ஆண்டு சந்தா ரூ.50/- Annual Subscription Rs.50/- தனிபிரதி விலை ரூ.5/-



அவசர ஜெப உதவிக்கு

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

94433 46119
96558 52999

# ஆசிரியர் மனம்

கர்த்தருக்குள் மிகவும் அன்பான சகோதர ! சகோதரிகளுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள் பல. நாங்கள் நலமாக உள்ளோம். அதுபோல நீங்களும் நலமுடன் இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறோம். மேலும் உங்கள் பிள்ளைகள் +2, மற்றும் 10வா எழுதி மேல்படிப்புக்காக எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார். அவர்களுடைய எதிர்கால படிப்புக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம். இப்பொழுது நாம் 6ம் மாதத்துக்குள் பிரவேசிக்க தேவன் கிருபை பாராட்டினார். கடந்த மாதம் காலைத்தியான கூட்டத்தில் கர்த்தர் ஊழியரோடு பேசி சபை மக்களை நடத்தினார். சிலர் சபை ஆராதனையில் சாட்சி பகிர்ந்து கொண்டார்கள். நமது ஊழியர் Rev. Dr. Victor Vimal அவர்கள் கர்த்தரிடத்தில் நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

நீங்களும் இந்த சபை ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். நாங்களும் சபையின் உபவாசக் கூட்டங்களிலும் ‘‘ஒரு மணி நேரம் ஊழியரோடு’’ என்ற ஜெபத்திலும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு செவ்வாய்கிழமைகளிலும், நீங்கள் அனுப்புகின்ற ஜெபக்குறிப்புகளுக்காக இனியும் தொடர்ந்து ஜெபிப்போம்.

நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் (சங் 32: 8). எனவே அன்பாகவர்களே, அனுதினமும் ஆவியானவர் நம்மை நடத்துவார். அவர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார். சிங்க குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும்; கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது. (சங் 34:10)

கர்த்தர் இந்த புதிய மாதத்தில் உங்கள் தேவைகளை சந்திக்கவும்; உங்கள் பிள்ளைகளின் படிப்பு, நலனுக்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

தேவ கிருபையானது உங்கள் அனைவரோடும் இருப்பதாக. மீள சந்திக்கலாம். ஆமென்.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில் சகோதரி

Sarah Vimal

(சாரா விமல்)

# உன் மீட்பர் யார்? அவர் எப்படிப்பட்டவர் ?

அன்பான சகோதர, சகோதரிகளே !இந்த ஜூன் மாதத்தில் தேவன் நம்மை எப்படி நடத்தப் போகிறார் என்று பார்ப்போம்.

இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்ப்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது, பிரயோஜனமாயிருக்கிறதை உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. (ஏசா 48:17).

இந்த வேத வசனத்தை தியானிக்கும்போது, நம்மை உரிமையோடு அழைக்கிறதை காணலாம் (1 ) உன் மீட்ப்பர் (2) உனக்கு போதித்து (3) நீ நடக்க வண்டிய வழியில் (4) உன்னை நடத்துகிற (5) உன் தேவனாகிய கர்த்தர் நானே என்று சொல்லுகிறார்.

## உன் மீட்பர் - மீட்டெடுப்பார்

என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் (யோபு 19:25) அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் எப்போதும் நமக்காக பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அதுவுமல்லாமல் நம்முடைய எல்லா இக்கட்டுகளிலும் நம்மை விடுவிக்கவல்லவர். அவர் இஸ்ரவேல் ஜனங்களை அடிமையின் வீடாகிய எகிப்திலிருந்தும் மீட்டெடுத்தார். உன்னுடைய வாழ்விலும் இந்த மாதத்தில் உன்னையும் மீட்டெடுப்பார் என்று விசுவாசிக்க வேண்டும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமானவர் நான் அசைக்கப்படுவது இல்லை (சங். 62:6) இப்படிப்பட்ட நம்பிக்கையும், விசுவாசமும் இருந்தால் தேவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். சிலநேரங்களில் சோர்ந்து போய் ஜெபிப்பதை மறந்து விடுகிறோம். அவர் நம்மீது அன்பு கூர்ந்ததினால் நம்மை வழி நடத்த வல்லவராய் இருக்கிறார். தாவீது சொல்லும்போது, நானே எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து, மேன்மேலும் உம்மை துதிப்பேன் என்கிறார் (சங். 71:14) .

## துணை நிற்கிறார்

யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே பயப்படாதே நான் துணை நிற்கிறேன் என்று, கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார். (ஏசா 41:14)

நாம் சிறுபூச்சி போல மிகவும் எளியவர்களாக இருப்பினும், சிறியவர்களாக இருந்தாலும், பெலன் இல்லாதவர்களாய் இருந்தாலும், அவர் நமக்கு துணையாக இருந்து 'பயப்படாதே' என்று நம்மை தேற்றுகிறவர். எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவது இல்லை; சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப் போவது இல்லை. (சங்.9:18). எனவே இந்த வசனத்தில் சொல்லியபடி நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார். சில நேரங்களில் பயந்து நாம் நம்முடைய நம்பிக்கையை இழந்து விடுகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் ஜெபித்து கர்த்தரிடம் ஒப்பு கொடுத்துவிட்டால், அவர் நம்மை நடத்துவார்.

### அவர் எப்படிப்பட்டவர்

நான் உங்களுக்காக அரண்களையெல்லாம் இழந்து விடவும் கல்தேயர் படவுகளிலிருந்து அலறவும் செய்யத்தக்கவர்களைப் பாபிலோனுக்கு அனுப்பினேன் என்று உங்கள் மீட்பரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 43:14) அவர் நம்மை சத்துருக்களின் கையிலிருந்து விடுவிக்கிறவரும், தாயின் கர்ப்பத்தில் நம்மை உருவாக்கினவர். அவர் வானங்களை விரித்து, பூமியையும் பரப்பினவர். அதோடல்லாமல் அவர் வல்லமை உள்ளவரும் தேசத்தை இளைப்பாற பண்ணுகிறவருமாகிய கர்த்தர். (எரே. 50:34)

எனவே நம்முடைய வழக்குகளை கர்த்தரிடம் சொல்லி அவரிடமிருந்து ஆலோசனைகளை பெற்று வாழ்வில் அவரை முன்பாக வைத்து செயல்பட தேவன் நம்மை பலப்படுத்துவாராக. நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்கு சித்தமானயாவையும் செய்கிறார். (சங். 115:3).

### போதகர் - போதிக்கிறவர்

சில நேரங்களில் நாம் தேவனுக்கு ஏற்ற காரியங்களை செய்ய முடியாமல் சாக்கு போக்கு சொல்லி தட்டி கழிப்பவர்களாய் இருக்கிறோம். மோசேயும் அப்படித்தான். கர்த்தர், இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னை பார்வோவிடம் அனுப்புவேன் வா என்றார். மோசே தேவனை நோக்கி பார்வோனிடம் போகவும் இஸ்ரவேல் ஜனங்களை அழைத்து வரவும் நான் எம்மாத்திரம் என்றான். (யாக். 3:10, 11) நாம் கூட சில சந்தர்ப்பங்களில் நான் இதை செய்ய தகுதி எனக்கு இல்லை, என்று சொல்லுகிறோம். மோசே மறுபடியும், ஆண்டவரே நான் வாக்கு வல்லவன் அல்ல நான் திக்குவாயும் மந்த நாவும்

உள்ளவன். எனவே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான். அப்போது கர்த்தர் மோசேயிடம், ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய் பேசுகிறவன். அவன் உன்னை சந்திக்க வருகிறான். நீ அவனோடேபேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு. நான் உன் வாயிலும், அவன் வாயிலும் இருந்து உணர்த்துவேன். அவன் உனக்கு பதிலாக பேசுவான். அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்கு தேவனாக இருப்பாய் (யாத். 4:10-16)

நாம் பல சந்தர்ப்பங்களில் தேவன் நம்மை நடத்த ஒப்புக் கொடுக்க மனமில்லாமல் இருக்கும்போது, அவர் நமக்கு போதித்து என்ன, எப்படி செய்ய வேண்டும் என்று நம்மை உணர்த்துவார்.

நான் உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன். உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் (சங். 32:8). இந்த மாதத்தில் தேவன் நம்மை போதித்து நடத்துவார். நாம் செய்ய இருக்கிற காரியங்களை அவரிடம் சொல்லும் போது, அவரின் ஆலோசனையின்படி நடக்கும் போது நாம் வெற்றி பெற வழி உண்டு. ஒரு வேலை காரியமாக இருந்தாலும், உயர் படிப்பு படிக்க யோசித்தாலும், திருமண காரியமாக இருந்தாலும், அவர் வார்த்தையை கேட்டு நடக்கும்போது எல்லாம் ஆசீர்வாதமாக மாறும். நம்முடைய பெலவீனங்களையே நாம் சிந்தித்து கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்ற தவறிவிடுகிறோம். இனி இப்படி செய்யாமல் கர்த்தரிடம் கேட்டு, கீழ்படிந்து செயல்படும்போத யாவும் ஆசீர்வாதமே. கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் எவனோ, அவனுக்கு தாம் தெரிந்து கொள்ளும் வழியை போதிப்பார். (லூக் 5:4).

இயேசுவின் போதகத்தை கேட்க திரளான ஜனங்கள் வந்து அவர் வார்த்தைகளை கேட்ட பின்பு அவர்களுக்கு வேண்டிய ஆகாரமாகிய மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களிடம் ஆழத்தில் மீன்கள் கிடைப்பதை சொல்லி அனுப்புகிறார். சீமோன் ஐயரே இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம் வார்த்தையின்படியே வலையை போடுகிறேன் என்று சொல்லி, வலை கிழிந்து போகத் தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். இயேசுவின் போகத்தை கேட்டபின்பு அதிகமான ஆசீர்வாதம் கிடைத்தது என்று எல்லாரும் பிரமிப்பு அடைந்தார்கள்.

நாம் அவர் வார்த்தைகளை கேட்க ஆலயத்துக்கு நேரத்துக்கு வருகிறோமா? அவருக்கு நன்றி சொல்கிறோமா? அவர் செய்த

காரியங்களை சபை நடுவே சாட்சி சொல்கிறோமா? சற்று யோசித்து பாருங்கள். நம்மை தேவன் எதற்க்காக தெரிந்தெடுத்தார் என்று யோசித்தோமானால் மேன்மேலும் ஆசீர்வாதமாய் இருப்போம். இயேசு சீமோனிடம் பயப்படாதே இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய். (லூக். 5:10). இயேசுவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டிய தைரியத்தையும், பெலனையும், அவர் நமக்கு கொடுப்பார்.

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும். (நீதி 16:3)

இந்த மாதத்தில் நீங்கள் எதை செய்ய வேண்டும் என்று நினைத்திருக்கிறீர்களோ, உயர் அதிகாரியிடம் பேச வேண்டிய காரியம் இருக்கிறதோ, இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக யோசித்துக் கொண்டு, கலங்கி இருக்க வேண்டாம் அவரிடம் ஒப்பு கொடுத்து, அவர் வார்த்தைகளை விசுவாசத்தோடு கேட்டு பலன் பெறுங்கள். அவர் உங்களை நடத்துவாராக.

**அறிவுரை கூறுபவர்**

அடுத்தது நம்மீட்பர் அறிவுரை கூறி இப்படி செய் என்பார். இஸ்ரவேலரே நீங்கள் பிழைத்திருக்கும் படிக்கும் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற தேசத்தில் நீ பிரவேசிக்கும் படிக்கும், அதை சுதந்தரித்துக் கொள்ளும் படிக்கும், நான் போதிக்கிற கட்டளைகளை கை கொள்ளும்படிக்கும், என் நியாயங்களையும் கேளுங்கள். (உபா.4:1,2)

தேவனுடைய வசனங்களை ஊழியர் சபையில் பிரசங்கிக்கிற வேளையில் மிகவும் கவனமாக கேட்க வேண்டும். விசுவாசம் கேள்வியினால் வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும் (ரோ. 10:17). கர்த்தருடைய வார்த்தைகளை காது கொடுத்து கேட்கிற போது விசுவாசம் பெருகும். உங்கள் செவியை சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன் (ஏசா. 55:3). இப்படி நம்மை அறிவுறுத்தி நலமான பாதையில் நடத்தவல்லவர் கர்த்தர் நம் வாழ்வில் செய்கிற அற்புதங்களை மறவாதபடி சபையில் சாட்சி சொல்கிற அனுபவம் உண்டா, நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணி என் கட்டளைகளையும், நியாயங்களையும் தெரியப்படுத்தினேன். அவைகளின்படி செய்கிறவன் அவைகளால் பிழைப்பான் (எசே. 20:11) மேலும் இயேசுவை பிசாசானவன் அவர் பசியாய் இருப்பதை அறிந்து, நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்த கல்லுகள் அப்பங்களாகும் படி

சொல்லும் என்றான். இயேசு மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதி இருக்கிறதே என்றார். (மத். 4:3,4) அவருடைய வார்த்தைகளை கேட்டு அவகைளின்படி நம் வாழ்க்கையை செம்மையாய் நடத்த கர்த்தர் தாமே பெலன் தருவாராக.

**வழி நடத்துகிறவர்**

நீங்கள் வலதுபுறமாய் சாயும் போதும், இடது புறமாய் சாயும் போதும் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் (ஏசா 30:21). உங்களுடைய பாதையை செவ்வை படுத்துவார் என்ன செய்வது எப்படி போவது என்று நினைக்க வேண்டாம். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்பவர் உன்னோடே வருவார். உன் பின்பாக இருந்தது. உன்னை guide பண்ணுவார். கர்த்தர் ஆபிரகாமை அழைக்கும் போது, அவர் உன்னை பெரிய ஜாதியாக்கி, ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைபடுத்தி ஆசீர்வதிப்பேன் என்றார். இந்த ஆசீர்வாதங்களைப் பெற சில காரியங்களை செய்ய வேண்டியதாய் இருந்தது. ஆபிரகாம் தன் தேசத்தையும், இனத்தையும்,தகப்பன் வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான் காட்டும் தேசத்துக்கு போ என்றார் (ஆதி 12:1,2).

எனவே நம் வாழ்க்கையில் விட்டு விலக வேண்டிய காரியங்கள் இருக்கும். அவைகளை சரியாக நாம் கடைபிடித்தால் கர்த்தரின் ஆசீர்வாதம் தங்கும். இதற்கு தேவை ஆவியானவரின் நடத்துதல். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். வரப்போகும் காரியங்களையும், நம் வாழ்வில் நடக்கப் போகிற காரியங்களையும் அறிவிப்பார். (யோவா.16:13).

எனவே எனக்கருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, உன் மீட்பர் யார்? அவர் என்ன காரியங்களை செய்வார் என்று இந்த செய்தியின் மூலமாக அறிந்திருப்பீர்கள். கோணலானவைகளை செவ்வையாக மாற்றிஇந்த மாதத்தில் நம்மை கைவிடாமல் இருப்பார்.

எனவே அவர் நடத்த ஒப்பு கொடுங்கள். தேவன் பெரிய அற்புதங்களை செய்வார். மீள உங்களை சந்திக்கும் வரை கர்த்தரின் கரம் உங்களோடு இருப்பதாக. ஆமென். அல்லேலுயா.

# கண்டவைகளும் கேட்டவைகளும்

## சுகம் கொடுத்த தேவன்

என் பெயர் கல்பனா. சில நாட்களுக்கு முன்பு எனக்கு இடதுபுற மார்பகத்தில் கட்டி இருந்தது. அதை டாக்டரிடம் பரிசோதிக்கையில் அதன் அளவு 1 to 4 mm இருந்ததால் Normal என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு 5 mm இருந்தது. அது Normal கட்டியா அல்லது Cancer கட்டியா என்று Biopsy பண்ணினால் தான் தெரியும் என்று டாக்டர் சொன்னார்கள். அதன் பிறகு Pastor அம்மாவிடம் ஜெபிக்க சொன்னேன். Result ம் வந்தது. அது Normal கட்டிதான் பயப்பட வேண்டாம் என்று கூறினார்கள். Surgeryம் நல்லபடியாக முடிந்தது. சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

சகோதரி. **கல்பனா,** வேலூர்.

## நினைத்து பார்க்கிறதற்கும் மேலாக உயர்த்தின தேவன்

என் பெயர் சௌமியா. நான் ஒரு Private Schoolல் Admin வேலை பார்த்து வருகிறேன். வெகு நாட்களாக வேலை மாற்றத்திற்காக ஜெபித்து, பிரயாசப்பட்டு கொண்டிருந்தேன். Usual ஆக Admin Sectionல் வேலை கிடைப்பது கடினமாய் இருக்கும். நான் Pastor Aunty கிட்ட சொல்லி ஜெபித்தேன். அப்பொழுது Aunty கண்டிப்பாக கர்த்தர் செய்வார். நீ முயற்சி செய் என்று சொன்னார்கள். காலை தியான கூட்டத்தில் Aunty சங். 34ஐ தினமும் வாசியுங்கள் என்று கூறியிருந்தார்கள். அதுபோல, நான் தினமும் விசுவாசத்தோடு வாசித்து ஜெபித்தேன். அதிசயமாக நான் எதிர்பார்க்கிதற்கும் மேலாக ஒரு International School ல் Admin பணி கிடைக்கும்படி செய்தார். ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தின தேவனுக்கு ஸ்தோத்திரம்.

சகோதரி. **சௌமியா,** வேலூர்.

## தேர்வில் வெற்றி கொடுத்த தேவன்

என் பெயர் Pavithran. நான் 10th Public Exam எழுதியிருந்தேன். Result எப்படி வரும் என்று பயந்தேன். ஆனாலும் Pastor Auntyயிடம்


ஜெபித்தேன். தேர்வில் வெற்றி பெற கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**C. Pavithran**, Ranipet.

## கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்தேன்


நான் கணியம்பாடி பகுதியில் இருந்து வருகிறேன். கர்த்தர் என் மனவிருப்பத்தையெல்லாம் நிறைவேற்றினார். இந்த ஆலயத்தில் நான் தொடர்ந்து வரவும், பின்பு கல்லூரி முடித்து, வேலை கிடைக்கும்படி செய்தார். பிறகு எங்கள் வீடு கட்டும்படி கிருபை பாராட்டினார். என்னுடைய திருமணம் பற்றி ஊழியர் இருக்கும்போதே ஜெபித்தார். எல்லாம் நல்லபடியாய் முடியும் என்று கூறினார். அதே போல, மே 9ஆம் தேதி இந்த ஆலயத்தில் பாஸ்டர் அம்மா அவர்கள் என் திருமணத்தை நடத்தினார்கள். நான் கிறிஸ்துவ திருமணங்களை பார்த்தது கூட இல்லை. ஆனாலும் என் திருமணம் மிக அழகாக நடந்தது. இப்படியாய் கர்த்தர் என் வாழ்வில் செய்த எல்லா நன்மைகளுக்காக துதிக்கிறேன்.

**Pro. Mohanraj**, Kaniyambadi.



**அவசர ஜெப உதவிக்கு**

*"ஜெபக்குறிப்புகளை, கடிதங்களை அனுப்ப மற்றுமொரு வாய்ப்பு"*



E-Mail : pastorvictorvimalcga@gmail.com
sarahvimal28@gmail.com

## ஜூன் 2025 மாதத்திற்கான வாக்குத்தத்தம்

*"கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப் போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்கு திடனும் பெருவெள்ளத்துக்கு தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்"*

- ஏசா 58 : 11

# தேடுங்கள் கண்டடைவீர்கள்

(பிலிப்பியர் மற்றும் கொலோசேயர் பகுதியிலிருந்து கேள்விகள் எடுக்கப்பட்டுள்ளது.)

1. நாம் எதற்கு உடன்பட்டவர்கள் என்று அப். பவுல் குறிப்பிடுகிறார் ?
2. கிறிஸ்துவின் நாளுக்கென்று நாம் எப்படி இருக்க பவுல் வேண்டுதல் செய்கிறார் ?
3. நாம் எதற்கு பாத்திரராக நடந்து கொள்ள வேண்டும் ?
4. எதற்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று எண்ணினார் பவுல் ?
5. நாம் எதை சிந்தித்துக் கொண்டிருக்க பவுல் கூறுகிறார் ?
6. பவுல் எதினால் திருப்தியடைந்திருக்கிறேன் என்று சொல்லுகிறார் ?
7. கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரன் என்று பவுல் யாரை குறிப்பிடுகிறார் ?
8. புறஜாதிக்குள்ளே விளங்கிய இரகசியம் என்ன ?
9. எவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது ?
10. எதைச் செய்தாலும் அதை எப்படி செய்ய வேண்டும்?
11. எதை களைந்து போட வேண்டும்?
12. நாம் எப்படி ஊழியஞ்செய்ய வேண்டும் என்று அப். பவுல் கூறுகிறார் ?
13. தமக்காக வேண்டிக் கொள்ளும்படி பவுல் ஏன் கேட்டுக் கொண்டார் ?
14. நம் பேச்சு எதனுடன் சுவையூட்டப்பட வேண்டும் ?
15. கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி யாரிடம் சொல்ல வேண்டும் ?

## கடந்த மாத இதழுக்கு சரியான விடையளித்தவர்கள்

### சகோதரிகள்

1. Sr. Florence Rajamohan - Aruppukottai
2. Sr. Annie Inbanayagam - Tuticorin
3. Sr. Meera Pandian - Trichy
4. Sr. Jeyaseeli Jeyaraj - Lalgudi
5. Sr. Blessy - Vellore
6. Sr. Gracy Ithra - Vellore
7. Sr. Gnana Kalai Arasi - Voorhees College, Vellore.
8. Sr. K. Preethi - Vellore
9. Sr. Sudha- Voorhees College, Vellore
10. Sr. Alice Augustin, Bagayam
11. Sr. Beulah John, Bagayam

### சகோதரர்கள்

1. Bro. Edward - Voorhees College, Vellore
2. Bro. Yesudoss - Voorhees College, Vellore
3. Bro. Godwin Premkumar Voorhees College, Vellore
4. Bro. A. Srinivasan, Voorhees College, Vellore
5. Bro. Abraham, Vellore

### கடந்த இதழின் கேள்விகளுக்கு சரியான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கலா 1 : 6 | 6. | கலா 3 : 13 | 11. | எபே 3 : 16 |
| 2. | கலா 1 : 12 | 7. | கலா 4 : 1 | 12. | எபே 4 : 26 |
| 3. | கலா 2 : 1 | 8. | கலா 5 : 1 | 13. | எபே 5 : 10 |
| 4. | கலா 2 : 3 | 9. | எபே 1 : 3 | 14. | எபே 5 : 29 |
| 5. | கலா 2 : 8 | 10. | எபே 2 : 13 | 15. | எபே 6 : 21 |

### ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am – 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am – 11.30 am |
| பிரதி செவ்வாய் | ஊழியருடன் ஒரு மணி நேர ஜெபம் 7.00 pm – 8.00 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm – 8.30 pm |
| 2வது சனிக்கிழமை | உபவாசமும், தெய்வீக சுகமளிக்கும் கூட்டம் 10.00 am – 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm – 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm – 8.30 pm |

Regd. under Newspaper RNI No.TNTAM/2015/66320 & Posting under / Book Pack of Containing Periodicals with RNI

# செய்திச் சிதறல்

1. அன்சுல் மிஸ்ராவுக்கு ஒரு மாத சிறை தண்டனை - சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு.
2. டெல்லி சென்ற முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு.
3. மதத்தின் பெயரால் அப்பாவிகளை கொல்வதற்கு கடும் எதிர்ப்பு. தீவிரவாத எதிர்ப்பில் இந்தியாவுடன் நிற்பதாக அமீரகம் உறுதி.
4. மாணவர் சேர்க்கை தொடர்ந்து சரிவு மூடப்படும் பாலிடெக்னிக் கல்லூரிகள்.
5. தொழில்துறையில் திறன்மிகு பணிகள். சிப்காட் மேலாண்மை இயக்குனர் உறுதி.
6. ஆபரேஷன் சிந்தூர் ; சுப்ரீம் கோர்ட் புகழாரம் பெண் அதிகாரி பணியில் தொடர அனுமதி.
7. தெரியாது என பாசாங்கு செய்யக் கூடாது. பாகிஸ்தானுக்கு ஜெய்சங்கர் பதிலடி.
8. கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்ட பயனாளிகளுக்கு பணி ஆணை குடியாத்ததத்தில் எம்எல்ஏ வழங்கினார்.
9. உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன் 5ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. “பிளாஸ்டிக் மாசுக்கு முடிவு கட்டுவோம்”.
10. தமிழகத்தில் 7.85 லட்சம் பறவைகள். வனத்துறை கணக்கெடுப்பில் தகவல்.
11. இஸ்ரேல் தூதரக ஊழியர்கள் இரண்டு பேர் சுட்டுக் கொலை.
12. இங்கிலாந்து செல்லும் இந்தியா யு19 கேப்டனாக சிஎஸ்கே வீரர் நியமனம்.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal